செய்தி வெளியீடு எண்: 800 26.9.2008

# மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ.தமிழரசி அவர்கள் தலைமையில்மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் கூட்டம் சென்னை மாவட்ட ஆட்சியர் வளாக கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்றது

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் கூட்டம் இன்று 26.9.08 சென்னை மாவட்ட ஆட்சியர் வளாக கட்டிடத்தில் உள்ள கூட்டரங்கில் காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2008–09 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து விவாதிக்கப்பட்டது. பின்னர் 2008–09 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல், மயானப் பாதை அமைத்தல், மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல், ஆதிதிராவிட நல விடுதிகள் பராமரித்தல், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் வழங்குதல் போன்ற நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. விடுதிகள் பராமரிப்பில் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமென தனி வட்டாட்சியர்களுக்கும், ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.வ.கனகராஜ்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு கண்ணகி பாக்கியநாதன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை ஆணையர் திரு மாலிக் பெரோஸ்கான்,இ.ஆ.ப., மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.